குறுநாவல்

# இப்படி ஒரு மாறுதல்



சுஜாதா

COMICS PDF TIMES
HSC

குறுநாவல்

# இப்படி ஒரு மாறுதல்

சுஜாதா

## 1

ஜனார்த்தனுக்குத் தன் வாழ்க்கையில் இப்படி ஒரு மாறுதல் ஏற்படப் போகிறது என்று தெரிந்திருந்தால் ஊருக்குப் போகாமலிருந்திருப்பார். ஜனார்த்தனுக்கு நாற்பத்தைந்து வயசு. ஒரு மாதிரியான அபாயகரமான வயசு. வயசாகிக் கொண்டிருக்கிறது என்று இயற்கை அவ்வப்போது டயாபடிஸ், ரத்த அழுத்தம், நரை, முதலிய அடையாளங்கள் மூலம் நினைவுபடுத்திக் கொண்டிருந்தாலும் அதைப் பிடிவாதமாக நம்ப மறுக்கும் வயசு. மாடிப்படிகள் எல்லாம் விறுவிறு என்று ஏற முடியும், டென்னிஸ் முதலான விளையாட்டுக்கள் ஆட முடியும் என்று இன்னமும் நம்பும் வயசு. பெண்களுக்கு நாம் இன்னும் கவர்ச்சிகரமாக இருக்கிறோம் அவர்கள் நம்மை இன்னும் விரும்புகிறார்கள் என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் வயசு.

ஜனார்த்தன் நாற்பத்தைந்து வரை பணத்தைத் துரத்துவதிலேயே கவனமாக இருந்து விட்டார். சம்பாதித்து அலுத்தாகிவிட்டது. எதற்காக இன்கம்டாக்ஸ் கொடுக்க வேண்டும் என்று மேலே சம்பாதிப்பதில் அர்த்தமற்று அலுத்துப் போய் நிறுத்தியவர். வீடா? ஏழு வீடு. பண்ணையா? பெரிய ஃபார்ம். நாயா? உயர்ரக டாபர்மன். கோடை வாசஸ்தலங்கள், ஷேர்கள் எத்தனையோ பார்த்தாகிவிட்டது. மனைவி. ஒரே பெண்ணை அமெரிக்காவில் கல்யாணம் பண்ணிக் கொடுத்து அங்கே போய் சில வாரங்கள் இருந்து அதையும் பார்த்தாகிவிட்டது. போகாத ஊரில்லை, நாடில்லை, பார்க்காத காட்சியில்லை, சந்திக்காத மனிதரில்லை.

எல்லாமே பணம் சம்பாதிக்கும், செல்வத்தைத் துரத்தும் அடிப்படையில்தான். இதனால் நிரந்தர சிநேகிதங்கள் அவருக்கு ஏற்பட்டது கிடையாது. அதைப்பற்றி அவர் கவலைப்பட்டதும் இல்லை.

அன்று வரை—

"போயிட்டு எப்ப வருவீங்க?" என்றாள் மனைவி. வரவர அகலமாகக் குங்குமம் இட்டுக்கொண்டு அவள் தொழுகிற அம்மன் போலவே ஆகிக் கொண்டிருக்கிறாள். எப்போதாவது அவளைப் படுக்கையில் தொட்டுப் பார்த்தால் கையை மரியாதையாக விலக்கி, 'என்னங்க இப்ப இதெல்லாம்?' என்று... போகப் போகத் தெய்வீகத்தன்மை பெற்று விடுவதால் கிரீடம் போட்டுக் கொண்டு தலையை விரித்துக் கொண்டு, "பக்தா" என்றாலும் ஆச்சரியப்பட மாட்டார்.

அவ்வாறு மனைவி மாறிவிட்டதிலும் ஜனாவுக்கு அத்தனை கவலையில்லை. பெண் சகவாசம் என்பது இஷ்டப்பட்ட போது கிடைக்கிறபோது அது அவ்வளவு ஒன்றும் பெரிசாகத் தெரியவில்லை. வாழ்க்கையில் அடைய வேண்டியது என்று எதுவாவது பாக்கியிருக்கிறதா என்று யோசித்துப் பார்த்ததில் ஏதும் இல்லை என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தார் — அந்தப் பெண்ணைப் பார்க்கும் வரை—

## 2

விமான நிலையத்தில் கார் வரவில்லை. அதற்காக டூரிஸ்ட்டு ஐ.டி.டி.ஸி. கவுண்டரைத் தேடிப் போனார். அங்கே யாரும் இல்லை. இதுமாதிரி இதுவரை நிகழ்ந்ததில்லை. தேஷ்பாண்டே மேல் கொஞ்சம் கோபம் வந்தது. பரவாயில்லை. நாமே ஓட்டலைத் தேடிப்போகலாமே என்று விமான நிலையத்துக்கு வெளியே வந்து டாக்ஸி இருக்கிறதா என்று தேடினார். ஒடிசலாக ஒரு டாக்ஸி இருந்தது. விமான நிலையத்தின் சைஸுக்கு இது போதும் என்பது போல! அவருக்கு இந்தி அரைகுறை. டாக்ஸிக்காரன் பேசியது மராட்டி போல இருந்தது. 'கிளாரிட் ஜஸ், கிளாரிட் ஜஸ்' என்றார். அவன் 'காய், காய்' என்று விளித்துக் கொண்டிருக்கும்போது பின்னால் குரல் கேட்டது.

"ஸார்!"

திரும்பிப் பார்த்தார்.

"ஐ'ம் ஸோ ஸாரி, மை மிஸ்டேக்! உங்களுக்காகக் கார் கொண்டு வந்திருக்கிறேன். இரண்டு கார். சத்யன் மெஸேஜ் கொடுத்திருந்தார்."

"பரவாயில்லை, ஏறக்குறைய டாக்ஸி பிடித்துவிட்டேன்" என்றார் புன்னகையுடன்.

"வெரி ஸாரி, வெரி ஸாரி பிளேன் வரும் நேரத்தைத் தப்பாக எடுத்துக் கொண்டு..."

COMICS PDF TIMES



ஹெட் கிளார்க்: நம்ம 'சி' செக்ஷன் கிளார்க் தூங்கும் போது குறட்டை விடறுர் சார்!

மானேஜர்: சே! தினமும் இதே குற்றச் சாட்டுத்தானு...? இனிமேல் யாராவது தூங்காத போது குறட்டை விட்டால் மட்டும் வந்து சொல்லுங்க...!

—அ. தெய்வசிகாமணி

''அதனுல் என்ன நீ...''

''என் பெயர் சாயா.''

''டூரிஸ்ட் டிபார்ட்மெண்ட்டா?''

''இல்லே உங்கள் கம்பெனியில் வேலே செய்பவள்! பூஞ கிளேயில் எஸ். ஏ.யாக இருக்கிறேன். மிஸ்டர் தேஷ்பாண்டேயிடத்தில். அவர் வந்திருக்க வேண்டும். டில்லி போயிருக்கிறுர்.''

''தெரியும். நான்தான் அனுப்பி வைத்தேன்.''

''நாளே வந்துவிடுவார். உங்களே கிளாரிட்ட்ஜிஸில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது என் பொறுப்பு. லேட்டாக வந்தது தெரிந்தால் என்னேத் திட்டிவிடுவார்.'' அவள் இயல்பாக ஜனர்த்தனிடம் கைப்பெட்டியை வாங்கிக் கொண்டு மற்றொரு காரைப் போகச் சொல்லிவிட்டு அவர் ஏறிக் கொண்ட காரில்முன் ஸீட்டில் ஏறிக்கொண்டாள். ஏர்கண்டிஷன் குளிர் அதிகமாக இருந்தது. கார் டிரைவர் மிக வெண்மையான சீருடை அணிந்து மிக மரியாதையாக இருந்தான். அவனிடம் அவள் ஏதோ சொல்ல, நலுங்காமல் கிளம்பியது.

''உங்களே நான் முதல் தடவையாகப் பார்க்கிறேன். டெலிபோனில் உங்கள் குரலேக் கேட்டிருக்கிறேன். ஆன்யுவல் ரிப்போர்ட்டில் போட்டோ பார்த்திருக்கிறேன்.''

''நீ மராட்டியா?''

''ஆம். ஆனுல் தமிழ் தெரியும்.''

''அட எப்படி?''

''சின்ன வயசில் அப்பா அம்மாவுடன் சென்னேயில், ஆறு வருஷம் படித்திருக்கிறேன்.''

''தட்ஸ் நைஸ்.''

''அதற்காக என் தமிழைச் சோதிக்காதீர்கள். மறந்துவிட்டது.''

''வேறு என்ன தெரியும் உனக்கு?''

''குஜராத்தி, இந்தி, பெங்காலி, கொஞ்சம் கொங்கணி. என் அப்பா கொங்கணிக்காரர்.'

''நான் பாஷைகளேக் கேட்கவில்லே'' என்றுர்.

அவள் அவரைத் திரும்பிப் பார்த்துவிட்டு ஒருமுறை புன்னகைத்தாள். அவர் கேள்வியின் முழு அர்த்தமும் புரிந்தது போல. அந்தப் புன்னகை ஜனவை சுவிட்சு போட்டாற் போல மாற்றிவிட்டது. அந்தப் பெண் மெலிதாக இருந்தாள். குட்டைக் கை ரவிக்கையும் காட்டன் சேலேயும் அணிந்து அலம்பிவிட்ட பளிங்கு போலத் துல்லியமாக இருந்தாள். தலேமயிரைக் கச்சிதமாக வெட்டி, நகத்தை வெட்டி, லேசாகப் பவுடர் தீற்றல் லேசாக லிப்ஸ்டிக் எல்லாவற்றிலுமே ஒரு திறமையும் தெரிந்தது. அவளுக்கு இன்றைக்கெல்லாம் இருபத்திரண்டு வயசுதான் இருக்கும். பாலத்தைத் தாண்டும்போது நதியின் பெயர் எல்லாம் சொல்லிக் கொண்டு வந்தாள். ஏர்போர்ட் ஸ்டேஷன் இதுதான் என்று காட்டினுள். அவள் பேசப் பேச அவள்பால் ஈடுபாடு அதிகமாவதைத் தவிர்க்க முடியாது போல இருந்தது. கொஞ்சம் கான்வெண்ட் உச்சரிப்பில் பேசினுள்.

''மெட்ராஸ் ஆபீஸ் பார்த்திருக்கிறுயா?''

''இல்லே. ஆனுல் ரொம்ப 'பாஷ்'ன ஆபீஸ் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''மெட்ராஸ் ஆபீஸுக்கு வருகிறுயா?''

''ஒய் நாட்?'' என்றுள்.

மறுபடி அதே சிரிப்பு.

ஜனவுக்கு ரொம்ப நாளாக உறங்கிக் கொண்டிருந்த பழைய சிங்கம் ஒன்று விழித்தெழுந்தது. அவருக்கென்னவோ இன்று ராத்திரிக்குள் இந்தப் பெண்ணேப் படுக்கையில் வீழ்த்திவிடலாம் என்று தோன்றிய[illegible]. உண்மைதான். அவர் கம்பெனி சிப்பந்தி தான் அவள்! அதுவும் ஒரு ஆபீஸ் அஸிஸ்டண்ட்டு. அவள் எங்கே, கம்பெனியின் சர்வ உரிமையாளனை அதன் இந்தியா ஓவர் ஸீஸ் கிளேகள் சேர்த்துச் சர்வத்திற்கும் அதிபதியான நான் எங்கே! தேஷ்பாண்டேக்குத் தெரிந்தால் சிரிப்பான். ''பிஜே! உனக்குப் பெண்கள்தானே வேண்டும்! எத்தனே பேர்?'' என்பான். ஆனுல் லோகலாக ஆபீசில் கைவைக்காதே!'' தேஷ்பாண்டேக்குச் சிலகாரியங்கள் பந்தாவாகச் செய்ய வேண்டும். எப்படி அவனிடம் இந்தப் பெண்தான் வேண்டும் என்று சொல்வது? சொல்ல வேண்டாம்! நல்லவேளே தேஷ்பாண்டே இல்லே. ராத்திரிக்குள் பார்த்துவிடலாம்!

ஓட்டல் வாசலில் வண்ண விளக்குகளின் உதவியுடன் பார்பெக்யூ ரெஸ்டாரெண்டில் வெள்ளேக்காரர்கள் டிராயரில் மாமிசம் கடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் அவன் பெட்டியை எடுத்துக்கொண்டு ரிஸப்ஷனுக்குச் சென்று

"ஹிஹாஸ்தம்!" என்றாள் உற்சாகத்துடன்.

"இந்த ஓட்டலில் இருப்பது ஒரே ஒரு 'ஸூட்'தான். அதை உங்களுக்கு ரிசர்வ் செய்திருக்கிறது. ஸ்விம்மிங் பூலை நோக்கி நல்ல இடம்" என்றாள்.

அவனுடன் அறைக்குள் வந்து மணிப் பொத்தானை அழுத்தி, "ஏதாவது வேண்டுமா உங்களுக்கு?" என்றாள்.

"இதுவரை நீ தமிழ் பேசவே இல்லையே. அதை நான் கேட்க வேண்டாமா?"

"அது அப்புறம்" என்று சிரித்தாள். சிப்பந்தி உள்ளே வர, "காப்பி!" என்றாள். "உங்களுக்குக் காப்பி பிடிக்கும் என்று தேஷ்பாண்டே சொல்லியிருக்கிறார்."

"உனக்கு?"

"வில் ஷேர்!" ஜனார்த்தன் உட்கார "எதற்கு நிற்கிறாய். உட்காரேன்."

"உட்காரக் கூடாது."

"ஏன்?"

"பாஸ்."

"அதெல்லாம் நாளைக்கு ஆபீஸில்."

"இருந்தும் தேஷ்பாண்டேக்கு நான் இந்த அறைக்குள் நுழைந்தது தெரிந்தாலே வேலை நீக்கம் செய்துவிடுவார்."

"அதெல்லாம் ஒன்றுமே நடக்காது. நான் யார் தெரியுமல்லவா?"

"தெரியும். அதனால்தான்!"

"நான் யார்?"

"நீங்கள்தான் கம்பெனியின் ஸி.எம்.டி. உங்களுடன் நான், ஒரு அற்ப சிப்பந்தி, பேசுவதே தப்பு. தேஷ்பாண்டே கொலை பண்ணிவிடுவார். உனக்கு நான் என்ன சொன்னேன்? அவரை ஓட்டலில் சேர்ப்பித்துவிட்டுத் திரும்பி வர வேண்டியது தானே!"

"நான்தான் இருக்கச் சொன்னேன் என்று சொல்லிவிடேன்."

"நீங்கள் இருக்கச் சொல்லவில்லையே?"

"இப்போது சொல்கிறேன். இரு! ஹேவ் டின்னர் வித் மி! நீச்சல்குளத்தின் அருகில்!"

"தாங்க்ஸ்" என்றாள். கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள். பழைய கடிகாரம். புதிதாக இவளுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும், தேஷ்பாண்டேக்குத் தெரியாமல்.


COMICS PDF TIMES

''இப்போதாவது உட்காருவாயா?''

அவள் நாற்காலி விளிம்பில் உட்கார,

''இப்போதாவது தமிழ் பேசுவாயா?''

''அவள் கனைத்துக் கொண்டு, ''நீங்கள் என் முதலாலி'' என்றாள். ''சரிதானே?''

''ப்யூட்டிஃபுல் லாலி இல்லே லாளி.''

''ஓ எஸ்! முதலாளி! மராட்டியிலும் 'ள' இருக்கிறது.''

''நான் உன்னை விரும்புகிறேன்'' என்றார் ஜனு பதிலுக்கு.

''விரும்புகிறேன் என்றால்?''

''ஐ லைக் யூ என்று அர்த்தம்.''

''தாங்க்ஸ்.''

''தாங்க்ஸ்'' என்கிற அத்தனை சாதாரண வார்த்தையை இத்தனை இனிமையாக இழுத்துச் சொல்ல முடியுமா என்ன? இதற்கு இத்தனை சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா? அவளை ஏற இறங்கப் பார்த்து; நாளை தேஷ்பாண்டே வந்து விடுவதற்குள் இன்றைக்கே, இன்றிரவே பெண்ணே உன்னை... ''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று படுக்கையில் அருகில் இருந்த ஸ்விட்சைப் போட அறையில் இருந்த டீ.வி. உயிர் பெற்றது. அதற்கு முன் நாற்காலியைத் திருப்பிப் போட்டுக் கொண்டுவிட, ஜனார்த்தன் ''எக்ஸ்க்யூஸ்மீ'' என்று சொல்லிவிட்டு தொடர்ச்சியாக இருந்த அடுத்த அறைக்குச் சென்று முகம் கழுவிக் கொண்டார். இரட்டைப் படுக்கையின்மேல் லேசான ரோசா நிறத்தில் போட்டிருந்த படுக்கை விரிப்பைக் கலைத்து, 'பெண்ணே, உன் மெலிதான அந்தக் கைகளைத் தொட்டுத்தான் பார்க்கவேண்டும். தொட்டு உன்னை மெல்லத் திறந்து..' டீ.வி. யில் செயற்கையான சிரிப்புக் கேட்டது.

சட்டை மாட்டிக் கொண்டு கண்ணாடியில் தலைவாரிக் கொள்ளும்போது சாயம் பூசிக் கொண்டு வந்திருக்கலாமே என்று தோன்றியது. என்னைப் பார்த்தால் 45 சொல்லும்படியாகவா இருக்கிறது? இல்லையில்லை. அடுத்த அறைக்கு வாசனையாகச் சென்றார்.

காப்பி வந்துவிட, ''எத்தனை சர்க்கரை?'' என்றாள்.

டயபடீஸைக் காட்டிக் கொள்ள விரும்பாமல், ''ஒன் ப்ளஸ்.''

அவள் விரல்கள் காப்பியுடன் அவர் மனசையும் கலக்க, ''நீங்கள் இவ்வளவு சுமுகமாகப் பழகுவீர்கள் என்று எதிர்பார்க்கவே இல்லை'' என்றாள்.

''எம்.டி என்றால் பூச்சாண்டி என்று தேஷ்பாண்டே சொல்லி வைத்திருக்கிறானா?''

''அப்படியில்லை. ஆனால் கொஞ்சம் உங்களிடம் தள்ளி நின்று பேச வேண்டும் என்பது போல ஒரு பயத்தை ஏற்படுத்தி விட்டார்.''

''இப்போது பயமாக இருக்கிறதா?''

''இல்லை.''

இருவரும் காப்பி சாப்பிட, ஜனார்த்தன் அறையின் கதவைச் சாத்துவதைப் பற்றி அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. 'இந்தப் பெண் நிச்சயம் 'சாலு' என்றுதான் நினைத்தார். அருகே வந்து காப்பி கொடுத்துவிட்டுப் பக்கத்தில் தட்டி, 'உட்கார்,' என்றார். கொஞ்சம் தள்ளியே உட்கார்ந்தாள். காப்பியை அருந்தும்போது ஏர்ப்போர்ட்டில் போது போகாமல் அவர் வாங்கிய கைரேகை பற்றிய புத்தகத்தைப் பார்த்தாள். ''உங்களுக்குப் பாமிஸ்ட்ரி தெரியுமா?''

ஜனார்த்தன் எதிர்பாராத சந்தர்ப்பம் கிடைத்ததில் உள்ளே மகிழ்ந்து, ''தெரியுமே'' என்றார்.

''என் கையைப் பார்த்துச் சொல்லுங்களேன்'' என்று கையை நீட்டினாள்.

கோப்பையை வைத்துவிட்டு, அவள் கையை வாங்கிக் கொண்டு அதை விரல்களால் தடவிப் பார்த்தார். ஒரு சிறுவனின் கைபோலத்தான் இருந்தது, பெண்ணின் கையைத் தொட்டு எத்தனை எத்தனை நாளாகிறது? கடைசியாக அந்த ஹாங்காங் வேசி! ''மேக் இட் ஸ்நாப்பி மேக்...''

இந்தக் கை எத்தனை வேறுவிதமாக இருக்கிறது? ''இதுதான் ஹார்ட் லைன், இது லைஃப் லைன். உனக்கு நிறைய தொண்ணூறு வயசு வரைக்கும் ஆயுசு!''

''பதவி உயர்வு வருமா? அமெரிக்கா போவேனா?''

''பதவி உயர்வு நாளைக்கு வேணுமா?''

அவரை நிமிர்ந்து பார்த்து, ''ஓ ஐ ஃபர்காட்! நீங்கதானே பாஸ்!'' என்றாள்.

''அமெரிக்கா போகிறதும் ஏற்பாடு பண்ணிவிடலாம் அடுத்த தடவை என்கூட வருகிறாயா? ஏரியன் காண்ட்ராக்டுக்கு செப்டம்பரில் போகிறேன்.''

''ஓ காட்!'' என்று நெற்றியைத் தொட்டுக் கொண்டு சிரித்தாள். ''இட்ஸ் மை லக்கி டே!''

ஜனார்த்தன் லேசாக அவளருகில் நழுவி உட்கார்ந்துகொண்டு முதலில் அவள் புடவை பட, அதன்பின் அவள் இடுப்பு பட, அதன்பின் அவளை ஒரு கையால் ஜோஸ்ய நோக்கமும் மற்றொரு கையால் இடுப்பைச் சுற்றி வந்து மார்பைத் தொடும் நோக்கமும் கொண்டு நெருங்க, அவள் மிக சாதுர்யமாகப் பம்பரக் கயிறு போல் கழன்று கொண்டு ''ப்ளீஸ் என் கையைப் பாருங்கள்'' என்றாள்.

''திஸ் இஸ் ஃபேட் லைன்!''

''எனக்கு என்னவோ உங்களுக்குக் கைரேகை பற்றித் தெரியாது என்று தோன்றுகிறது.''

''ஆம். ஏர்ப்போர்ட்டில் போது போகாமல் வாங்கிய புத்தகம் அது.''

''அப்படியென்றால் பொய் சொல்லி...''

''ஆம். உன் கையைத் தொடுவதற்குத் தான் கைரேகை சாஸ்திரம்.''

''வெரி பாட்! வெரி நாட்டி!'' என்று எழுந்து நாற்காலியில் உட்கார்ந்தாள்.

ஜனு அவசரப்படாதே, இவள் வந்துவிடுவாள். லேசாகத்தான் பிகு பண்ணிக்கொள்கிறாள். ஒருமுறை தலைப்பைச் சரிப்படுத்திக் கொண்டது வேண்டுமென்றே என்றுதான்

பட்டது அவருக்கு.

"டின்னர் ஆர்டர் செய்யலாமா?" என்றார்.

"இத்தனை சீக்கிரமா? இப்போதுதானே காப்பி சாப்பிட்டோம்?"

"ஒரு சினிமா பார்க்கப் போகலாமா?"

"இந்த வேளையிலா? எட்டரைக்கா?"



"நேத்து ராத்திரி புது ஸ்வீட் ஒண்ணு சாப்பிடுற மாதிரி கனவு கண்டேன்டா!"

"அது எனக்கு நேற்றே தெரியும்..."

"எப்படி?"

"நீ படுத்திருந்த பாயில் பாதியைக் காணோமே!..."

— அண்ணா அன்பழகன்

"ஏதாவது ஒரு சினிமா! சினிமாவை யார் பார்க்கப் போகிறார்கள்?" என்று கண் சிமிட்டினார்.

"நாட்டி" என்றாள்.

ஜனார்தன் அவளருகே சென்று உட்கார முயற்சி செய்ய அவள் அப்படியே நாற்காலியிலிருந்து நகர முடியாமல் சிறைப்பட்டுவிட்டாள். அவள் முகத்தில், கன்னத்தில் முத்தமிடப் போனார். "ப்ளீஸ், ப்ளீஸ் வேண்டாம்" என்றாள். ஜனார்தன் அவள் கழுத்தில் முகத்தைப் பதித்தார். அப்போது டெலிபோன் மணி அடித்தது.

'சட்'டென்று அலுத்துக் கொண்டு அதை எடுத்தார்.

"ஸூட் நம்பர் ஒன்?" கட்டையான ஆண் குரல்.

"எஸ்."

"இஸ் சாயா இன்?"

"சாயா? ஓ... சாயா!"

அவள் உடனே அவரருகில் வந்து டெலிபோனை வாங்கிக் கொண்டு "சாயா". சற்று நேரம் மவுனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஜனார்த்தனுக்கு ஜுரம் வந்து அடங்கியது போல இருந்தது. மற்றொரு முறை ஜுரம் வர நேரமாகும்.

"ஒன் மினிட், இதோ வந்துவிடுகிறேன்" என்று டெலிபோனை வைத்துவிட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.

ஜனார்த்தன் அவள் விட்டுச் சென்ற கைக்குட்டையை எடுத்து முகர்ந்து பார்த்தார். ஒருமாதிரியான பெண் வாசனை என்றுதான் சொல்ல வேண்டும். பர்ஃப்யூம் கலந்திருந்தாலும் ஒருவிதமான வாசனை. இந்தப் பெண் மேல் ஏன் இத்தனை ஈடுபாடு? ஏதோ ஒருவிதத்தில் என் மனத்தில் தேடிக் கொண்டிருந்த பெண் வடிவத்தைப் பூர்த்தி செய்கிறாள். இல்லை இளமையா? எத்தனையோ இளம் பெண்களைப் பார்த்திருக்கிறேன். மவள்ளைக்காரிகள், சைனாக்காரிகள்... வேறு ஏதோ! தேஷ்பாண்டேயிடம் சொல்லி எப்படியாவது...

சற்று நேரத்தில் கதவு தட்டப்பட "கமின் இட்ஸ் ஓப்பன்."

உள்ளே ஒரு வயதானவர் கையில் ஹெல்மட்டுடன் நுழைய அவருக்கு முன் வந்த சாயா, "கோக்கி! இவர்தான்" என்றாள்.

அந்த ஆசாமி நேராக ஜனார்த்தனை நோக்கி வர ஒருகணம் வெலவெலத்துப் போனார். அவர் கையைக் குலுக்கி "இட்ஸ் எ ப்ளஷர் மீடிங் யூ ஸார். சாயா உங்களைப் பற்றிச் சொன்னாள்."

"சாயா இது யார்?"

"இதுதான் என் கணவர்" என்றாள் சாயா.

மைகாட்! சட்டென்று ஒருவிதமாக உதிர்ந்துப் போனது போல உணர்ந்தார் ஜனார்த்தன். அந்த ஆசாமிக்குத் தலை முழுவதும் வழுக்கையாயிருந்தாலும் பாதகமில்லை. முகத்தில் ஒரு மாதிரி பொளிந்தது போலத் தழும்புகள். என்ன ஒரு குரூரமான விதி இது! இவளுக்கும், இவனுக்கும் பத்து வயதாவது வித்தியாசம் இருக்கும்.

'உங்களைப் பற்றிச் சாயா நிறையச் சொன்னாள். என் பெயர் பவ்டேகர். இதோ என் கார்டு' என்று பைக்குள்ளிருந்து விசுவாசமாகக் கார்டு எடுத்துக் கொடுத்தார். அதில் வினய் பவ்டேகர், மராட்டா ஏஜன்ஸீஸ் என்று எழுதியிருந்தது. "வீ எக்ஸ்போர்ட் விக்ஸ்... தலைமயிர்! உங்கள் கம்பெனியைப் போல அத்தனை பெரிய கம்பெனி கிடையாது. சாயா உங்கள் நல்ல குணத்தைப் பற்றிச் சொன்னாள்!"

கிண்டல் பண்ணுகிறானா என்ன? சாயாவைப் பார்த்தபோது இலேசாக தலை குனிந்து தனக்குள் சிரித்துக் கொண்டு ஒரு முறை ஜனார்த்தனைப் பார்த்தாள். அதில் ஒரு வித சதி இருந்தது.

"உங்கள் மனைவி மிகத் திறமைசாலி" என்றார். "யூ ஆர் லக்கி!"

சாயா அவரைப் பார்த்து, "மன்னித்துக் கொள்ளுங்கள். நான் கிளம்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. மற்றொரு முறை மற்றொரு சந்தர்ப்பத்தில் சந்திப்போம், என்ன?" என்றாள்.

"கட்டாயம்."

"அப்போது எனக்குக் கைரேகை சாஸ்திரத்தைப் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டும்!"

"கட்டாயம்" என்றார்.

அவள் அந்தக் கைக்குட்டையையும், புன்னகையையும் விட்டுவிட்டுச் சென்றாள். ஜனார்தனுக்கு முகத்தில் ரத்தம் பாய்ந்திருந்தது. அவள் பேசினதுக்கெல்லாம் இரண்டு அர்த்தங்கள் — ஒன்று நிசம், ஒன்று சதி!

ஆரம்பித்த பாடத்தை முடிக்க வேண்டாமா? என்ன ஒரு தைரியம்! கணவன் முன் சாதுபோலத்தான் இருந்தாள். இருந்தும் இருந்தும்...

ஜனா இதுவரை கல்யாணமான பெண்களுடன் விவகாரம் ஏதும் வைத்துக் கொண்டதில்லை. அனாவசியமான சிக்கல்! இது வேறு சகவாசம்! என் அந்தஸ்துக்கு உகந்ததல்ல! வேண்டாம் ஜனா, இந்தப் பெண்ணைப் போல ஆயிரம் கிடைக்கும். எல்லாம் ஒன்றுதான். என் அந்தஸ்து என்ன, ஸ்திதி என்ன, கேவலம் ஒரு ப்ராஞ்சு ஆபிசில் ஒரு ஆஃபிஸ் அஸிஸ்டெண்ட் பின்னால் அலைகிறான் என்றால் சமூகத்தில் என் நிலைமை என்ன ஆவது? விலகு சைத்தானே!

தேஷ்பாண்டேயிடம் நாளைக்குச் சொல்லி அவளை சென்னை ஆபிசுக்கு மாற்றிக் கொண்டால் என்ன? சே, விலகு சைத்தானே விலகு!

3

மறுநாள் போர்டு ரூமுக்குப் போகும் போது தேஷ்பாண்டேயின் அறை வாசலில் அந்தப் பெண்ணைக் காணவில்லை. போர்டு மீட்டிங் நடக்கும் போது ஸ்டெனோகிராஃபிக்கு ஒரு வயசான அம்மாள்தான் இருந்தாள். வேண்டுமென்றே அவள் வரவில்லையோ என்று நினைத்தார். கல்யாணமானவளைப் பற்றி அத்தனை விரிவாக எண்ணுதல் அவருக்குத் தயக்கமாக, சங்கோசமாகத்தான் இருந்தாலும் அவள் அனுமதித்த வரை அந்தரங்கம் அவர் உடலிலும் மனத்திலும் இனித்துக் கொண்டிருந்தது.

லஞ்சின் போது தேஷ்பாண்டே "பிஜே என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்? உடம்பு சரியில்லையா?"

"ஐம் ஓ கே, தேஷ்!"

"ஸாரி நான் சாயங்காலம் வரமுடியவில்லை. டில்லிக்கு..."

"பரவாயில்லை. அந்தப் பெண் என்னைச் சிறப்பாகவே கவனித்துக் கொண்டாள்."

"சாயா எதுவும் உளறவில்லையே? கொஞ்சம் வெகுளியான பெண்"

"தேஷ், அவளை எதற்காக அனுப்பியிருந்தாய்?"

"புது முகம்! பிஜே எங்கள் முகத்தைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருக்கும் உனக்கு நம் போர்டில் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்களா, செத்துப் போயிட்டார்களா என்று கூடத் தெரிவதில்லை. அந்தப் பெண் தப்பாக நடந்து கொள்ளவில்லையே?"

"சேச்சே, அதெல்லாம் இல்லை. இன்ஃபாக்ட் ஐ லைக் ஹர்! அவளை, சென்னை போவதற்கு முன் ஒரு நடை பார்த்துவிட உத்தேசம்."

"நான் கூப்பிடுகிறேன். அப்புறம் எக்ஸ்பான்ஷன் ஸ்கீமை எப்படியாவது போர்டில் தள்ளி விட்டு விடு பிஜே!"

"தேஷ், நீ சொன்னால் சரி! அவள் பெயர் என்ன" என்றார் தெரியாதது போல.

"சாயா."

"வெரிகுட் ப்ளெஸண்ட் அண்ட் எஃபிஷெண்ட் கர்ள்."

தேஷ்பாண்டே ஒரு மாதிரிபார்த்து, "என்ன பிஜே உள்ளுக்குள் ஏதாவது பழைய தடம் புரள்கிறதா?"

"சேச்சே அதெல்லாம் இல்லை. சிப்பந்தியாயிருந்தாலும் திறமை இருந்தால் சிலாகிக்க வேண்டும்".

"வாஸ்தவம்! என்ன திறமை என்பதைப் பொறுத்தது!"

இருவரும் தேஷ்பாண்டேயின் அறைக்குள் செல்ல தேஷ்பாண்டே சுருட்டுப் பற்ற வைத்துக் கொண்டு, இண்டர்காமை அழுத்தி "கால் சாயா ப்ளீஸ்" என்றான்.

"சில காகிதங்களில் — ரூட்டீன் போர்டு பேப்பர்ஸ் — கையெழுத்துப் போட வேண்டும்." ஜனார்த்தன் அவைகளில் சுவாரஸ்யமில்லாமல் கையெழுத்துப் போட கதவைத் தட்டிக் கொண்டு 'மே ஐ கமின் ஸார்', என்று உள்ளே வந்தாள்.

பயந்து தயங்கி உள்ளே வந்தவள் பகல் வெளிச்சத்தில் இன்னும் சிவப்பாக இருந்தாள். மெலிய நீலத்தில் சாரி யணிந்து கொண்டு பிடிப்பாக ரவிக்கையுடன் முகத்தில் பயத்துடன் நின்றாள்.



பெண்ணின் அப்பா: மாப்பிள்ளை! நீங்க பரம கிரிக்கெட் ரசிகரா இருக்கலாம். அதுக்காக ரவி சாஸ்திரி தான் வந்து கல்யாண மந்திரம் சொல்லி பண்ணி வைக்கணும்னு பிடிவாதம் பிடிச்சா எப்படி?

— சௌம்யா

''ஸிட் டவுன் சாயா''.

''பரவாயில்லே, ஸார். நிற்கிறேன்.''

''பிஜே அதாவது ஜனார்தன் நேற்று உன் பணியை பாராட்டினார். அதைச் சொல்லவே''

''தாங்க்யூ ஸார், தாங்க்யூ. தட்ஸ் நைஸ் ஆஃப் யூ!'' ஜனார்த்தனே ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தாள்.

ஜனார்த்தன் அவளேயே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்க அவள் இடுப்பும் மார்பும் கையும் அப்பழுக்கற்ற உடலும் அந்த குரூரமுகனை நினைக்க வைத்தது. கணவன்!

''சாயா! எம்.டியே உன்னை சிலாகித்தாகிவிட்டது! இதற்கு மேல் என்ன!''

''சாயா, சென்னைக்கு மாற்றலாகி வருகிறாயா?''

''ஸாரி, ஸார். இல்லே!''

''ஒரு மூன்று மாதத்திற்கு! கொஞ்சம் அதிகப்படியா காரியம் இருக்கிறது. அந்த பளுவைச் சமாளிக்க''. தேஷ்பாண்டே ஒரு முறை கேள்விக்குறியுடன் பிஜேயைப் பார்த்து விட்டு உடனே புரிந்து கொண்டு ''கமான்! இட்ஸ் ஒன்லி டெம்பரரி!''

''உன் கணவனிடம் கேட்டு மாலேக்குள் சொல்லு!''

''மை காட் யூ ஆர் மேரிட்! இஸ் இட்!''

''எஸ் ஸார்.'' என்றாள்.

''ஸாரி ஐடின் நோ! பிஜே எல்லாம் விசாரித்து வைத்து விட்டாய்!''

''கன் ஐ கோ, ஸார்?''

அவள் சென்றதும் ''என் ஆபிசில் இருக்கிற முத்துக்களை கண்டு பிடிக்க பிஜே சென்னையிலிருந்து வர வேண்டியிருக்கிறது. நிசமாகவே நான் இவளை உன்னிப்பாக கவனித்ததில்லே! ராவிஷிங்! பிஜே யூ வாண்ட் ஹர் ரியலி?''

''எஸ்!''

''சென்னையில் என்ன அத்தனே தலே போகிற காரியம்?''

''ஐ ஜஸ்ட் வாண்ட் ஹர்! தினம் கொஞ்ச நாளேக்கு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். எதோ எப்படியோ என் உள்ளத்தில்குறையாக இருந்த ஒரு ஆசையை பிம்பத்தை அவள் பூர்த்தி செய்கிறாள்.''

''நீ அவளேப் பூர்த்தி செய்ய விரும்புகிறாய். பிஜே எதற்கு வம்பு! உனக்கு ஒரு பெண்தானே வேண்டும்?''

''எனக்கு இவள்தான் வேண்டும்!''

''கல்யாணமான கேஸ் பிஜே!''

''தேஷ்! நான் எப்போதாவது எதையாவது விரும்பி அடையாமல் இருந்தது உண்டா?''

''அது கம்பெனி சமாசாரம். அதன் விதிகள் வேறு!''

''எதையும் வாங்க முடியும். அதுதான் ஒரே ஒரு விதி!''

''மனத்தைத் தவிர!''

''எனக்கு மனம் வேண்டாம்! நீ இவள் புருஷனைப் பார்க்க வேண்டும்!''

''பார்த்துவிட்டாயா சரிதான்!''

''ராட்சசனும், தேவதையும் போல ஒரு பொருத்தம்!''

''ரியலி? அப்படியென்றால் கலேக்க வேண்டியதுதான்!''

தேஷ்பாண்டே சுருட்டை அற்பாயுசில் அணைத்தான்.

ஜனார்தன் தன் பைக்குள் அவள் கணவன் கொடுத்த கார்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். மத்யானம் போர்டு மீட்டிங் தொடர்ந்து நடந்து மூன்று மணிக்கு முடிந்த பின் ஜனார்தன் ''தேஷ் ஒரு விஷயம்'' என்றார்.

''சாயா தானே பிஜே? பறக்காதே! நீ ரொம்பப் பெரிய மனிதன் ஞாபகம் வைத்துக் கொள்''.

''நாட் வித் திஸ் கர்ள்!''

''மை காட். என்ன ஒரு பிடிவாதம்!'' சாயா அவர் அறைக்கு வந்ததும், ''என்ன சாயா கேட்டாயா?'' ''கேட்டேன் சார் இரண்டு மாதத்துக்கு என்றால் பரவாயில்லே என்றார் என் கணவர்.''

''தட்ஸ் எ குட் கர்ள்! மெட்ராஸ் ஆபிஸில் மற்றதைப் பார்த்துக் கொள்வார்கள்!...''

''எப்போதிலிருந்து டிரான்ஸ்ஃபர் பிஜே?''

''நேற்றிலிருந்து.''

அவள் சென்றதும் ''தே ஆர் ஆல்தி ஸேம் பிஜே!'' என்றான் தேஷ்.

''நாட் திஸ் ஒன்'' என்றார் ஜனார்தன்

## 4

ஏர்போர்ட்டுக்கு சந்திரன் வந்திருந்தான். ''கூடிய சீக்கிரம் நாளேக்கு என்னை ஆபிஸில் வந்து பாரு. பூனாவிலிருந்து தேஷ்பாண்டே ஒரு ஓ.எயை ஹெல்ப்புக்கு அனுப்பறான். அவளுக்கு கெஸ்ட் அவுஸ்ல அல்லது நல்ல ஓட்டல்ல ரூம் போட்டுரச் சொல்லு''.

சந்திரன் அவ்ரை நிமிர்ந்து பார்த்தான். லேசான வியப்பு அவன் கண்களில் ஒரு கணம், ஒரே ஒரு கணம்தான் தெரிந்தது. அப்புறம் அவன் முகத்தைப் பூட்டிக்கொண்டுவிட்டான். சந்திரன்தான் இதற்குச் சரி! அவசரமே இல்லே!

மனைவி அவரிடத்தில் இருந்த உற்சாகத்தை உணர்ந்து கொண்டாள். ''பூனாவில் என்னங்க நடந்தது?''

''ஒண்ணுமில்லே.''

''ஒரு மாதிரி தேன் குடிச்ச நரி மாதிரி இருக்கீங்க? கம்பெனில இந்த வருஷம் டிவிடெண்டு ஏதாவது ஜாஸ்தியா?''


''இல்லேயே. வழக்கம்போலத்தானே!''

''வேற மாதிரி இருக்கீங்க''.

''இத பாரு ரொம்ப சாமி கும்பிட்டா இப்படித்தான் ஆகும்!''

''எனக்கு ஏதாவது வாங்கிட்டு வந்தீங்களா, பூனாவிலிருந்து?''

''ஆர்டர் குடுத்துட்டு வந்திருக்கேன்




''சார்! ஐந்து நாள் பிரியாணி காசு முதலாளி கொடுத்து அனுப்பச் சொன்னார்.''

அடுத்த வாரம் வரும்'' என்றார்.

காலை ஜப்பான் கொலாபரேட்டர்கள் வந்திருந்ததால் சந்திரனுடன் பேச முடியாமல் போய்விட்டது. சப்பை மூஞ்சிக்காரர்களுடன் பேசின போது கூட அடிக்கடி சாயாவின் ஞாபகம் வந்தது. நிமிர்ந்து பார்த்து அவரை சற்று சதிப்பார்வையுடன் புன்னகைத்தது அடிக்கடி அவர் நினைவில் குறுக்கிட்டுக் கொண்டிருந்தது.

ஜப்பானியர்கள் போன கையோடு சந்திரனைக் கூப்பிட்டார். சந்திரன் வெளி ஆபிஸில் காத்துக் கொண்டிருக்கிறதாகத் தெரிந்தது.

''என்ன சந்திரன்?''.

''வரச் சொன்னீங்க''.

அவர் தன் மேசை இழுப்பறையிலிருந்து அந்தக் கார்டை எடுத்துக் காட்டினார்.''

சந்திரன் அதை உணர்ச்சியின்றிப் பார்த்து மௌனமாக இருந்தான்.

''இந்த ஆளைப்பத்தி எல்லா விவரமும் வேணும்.''

''சரி. வேறு ஏதாவது?''

''பூனாவிலிருந்து மாத்தி வரப் போறா சாயான்னு ஒரு பொண்ணு.''

''டெலக்ஸ் மெஸேஜ் வந்தது. அவளுக்கு மாரிஸ்ல ஏற்பாடு பண்ணியாச்சு.''

''அவளோட புருஷன் இவன்.''

''அப்படியா'' என்றான். சந்திரனை நாற்காலிக்கு கீழ் பாம் வைத்தால் கூட அதிர்ச்சியடைய வைக்க முடியாது. ''ஆச்சரியமா இல்லையா, சந்திரன்?''

''இல்லை.''

''சாயாவை நீ பார்க்கணும்!''.

''சாயா என்றால் நிழல்'' என்றான் சந்திரன். கார்டைப் பார்த்து ''இவனை என்ன செய்ய வேண்டும்?''

''முதலில் இவனைப்பற்றி விவரங்களைத் தெரிந்து கொள். அதன்பின் சொல்கிறேன்''.

சந்திரன் தனக்கு இதில் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை போலப் புறப்பட்டுச் சென்றான்.

சில சமயங்களில் ஜனார்தன், அவன் மனிதனே அல்ல, சட்டையைக் கழற்றிப் பிரித்துப் பார்த்தால் பல்சக்கரமும் ஒயர்களுமாக இருப்பான் என்று நினைத்ததுண்டு.

5

சாயா வரப் போகிறாள் என்று பூனா ஆபிஸிலிருந்து தகவல் இல்லை. இரண்டு தினம் விட்டு டெலிபோன் செய்தார். தேஷ் பாண்டே, ''மைகாட். பிஜே, திஸ் இஸ் லிமிட். கொஞ்சம் பொறுத்திரு. அனுப்பி வைக்கிறேன் கட்டாயம். இப்போதுதான் டிரான்ஸ்ஃபர் ஆர்டர் போயிருக்கிறது. ஜாயினிங் டைம் கொடுக்க வேண்டாமா?''

''அவளுடன் பேசலாமா நான்?''

''நோ! பாஸிட்டிவ்லி நோ!''

''லெட்மி டாக்டுஹர் தேஷ்!'' என்றார். அவர் குரலில் இருந்த அதட்டலை உணர்ந்து

கொண்டு "ஆல்ரைட் இவளால் எனக்கு வேலே போக வேண்டாம்" என்ருன்.

சற்று நேரம் காத்திருந்தபின் "ஹலோ என்று தயக்கமாக ஒரு இனிய குரல் கேட்டது. பிஅண்டி இலாக்கா அவள் குரலே அதிகம் கெடுக்க முடியவில்லே. "சாயா ஸ்பீக்கிங்!"

"சாயா திஸ் இஸ் ஜஞர்தன்."

"ஓ ஹலோ ஸார்! எங்கிருந்து பேசுகிறீர்கள்? இஸ் இட் எ ட்ரங்க் கால்?"

"ஆம்! சென்னேக்கு எப்போது வருகிருய்?"

"மிஸ்டர் தேஷ்பாண்டே நேற்றுத்தான் மாற்றல் கடிதம் கொடுத்தார். அதில் இரண்டு மாதத்துக்குத் தற்காலிகமானது என்று குறிப்பிடாததால்..."

"அதெல்லாம் இங்கே வந்து பார்த்துக் கொள்ளலாம். எப்போது வருகிருய்? ஃப்ளேட் டிக்கெட் எடுத்து கொடுக்கச் சொல்லட்டுமா?"

"இல்லே. வேண்டாம்."

"ஏன்?"

"எனக்கு ஏரோப்ளேனில் செல்ல பயம்".

"தட்ஸ் ஃபன்னி! சாயா உன் கணவர் எப்படியிருக்கிருர்?"

"அவர். அவர் வந்து பரவாயில்லே. அவருக்கும் உங்களேப் பிடித்துப் போய் விட்டது!"

"நீ இங்கு வருவதைப்பற்றி ஏதும் சொல்லவில்லேயே?"

"இரண்டு மாதத்துக்கு என்ருல் சம்மதம் என்ருர். வந்து பார்ப்பதாகத்தான் சொல்லியிருக்கிருர். போனே வைத்துவிடட்டுமா?"

"இல்லே. இல்லே. வைக்காதே."

"நிறைய செலவு ஆகுமே?"

ஜஞர்தன் சிரித்தார். "உனக்காக நான் ஒரு டெலிபோன் எக்ஸ்சேஞ்சையே வாங்கத் தயார்."

"பார்டன்?"

"சாயா. நான் உன்னே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"அங்கே எனக்கு என்ன வேலே?"

"வந்ததும் சொல்கிறேன்."

தேஷ்பாண்டே குறுக்கே புகுந்து, "பிஜே பேசியாகிவிட்டதா?"

"போதாது."

"ஐ திங்க் யூவ் கான் க்ரேஸி! பிஜே தேர் இஸ் எ லிமிட்!"

"அவளே கூடிய சீக்கிரம் அனுப்பு. ஒரு ஏர் டிக்கெட் வாங்கிக் கொடுத்துவிடு."

"பிஜே அனுவசியத்துக்கு குட்டி தேவதைகளுக்கு இடம் கொடுக்காதே! நான் பார்த்து அனுப்பி வைக்கிறேன். பதருதே. உன் மயக்கம் தீரட்டும் முதலில்!"

"இது மயக்கம் இல்லே."

"நீ மேலே எதுவும் சொல்வதற்குள் போனே வைத்துவிடுகிறேன்!"

ஜஞர்தன் சிரித்துக் கொண்டார். தன் நடத்தையை யோசித்துப் பார்த்தார். நிச்சயம் தேஷ்பாண்டே போன்றவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமாகத்தான் இருக்கும். அவர்களுக்கு என்ன தெரியும் என் மன இயக்கம்? இந்தப் பெண் மேல் இந்த பிரத்யேக மாமோகம் ஏன்? திடீரென்று புதிரின் எல்லா சில்லுகளும் அதனதன் இடத்தில் விழுந்து ஒரு வசீகரமான இதுநாள் வரை வாழ்நாள் முழுவதும் ஃப்ளாரிடாவிலும், ஜமைக்காவிலும், ஹாங்காங்கிலும், ஜப்பானிலும், பம்பாயிலும், ராஜஸ்தானிலும் தேடிக் கொண்டிருந்த அந்த பிம்பம் கிடைத்து விட்டது போல ஆயிரமாயிரம் சாத்தியக் கூறுகளில் அவருக்கே உரித்தான அவர் மனதின் ஒரே ஒன்று கிடைத்தது போல! அந்த முகம்! முகம் மட்டும் இல்லே. நிறம், உடலமைப்பு, எல்லாமே எவ்விருப்பம் என்று நியான் போட்டு ஒளிர்ந்து போல! வரட்டும் வரட்டும்!

தேஷ்பாண்டேயை விசாரித்து தினசரி அவளுடன் ஒரு வார்த்தையாவது பேசலாம் என்ருல் டில்லிக்கு ஈபிஸி மீடிங்குக்கு போக வேண்டியிருந்தது. தட்டிக் கழிக்க முடியாமல் அவர்தான் சேர்மன். டில்லிக்குப் போய் அங்கிருந்து ஆல்வார் ஃபாக்டரியும் ஒரு நாள் போய்விட்டு வரவேண்டியிருந்தது. நார்தர்ன் ஜி. எம். ரொம்ப வற்புறுத்திஞன். எல்லாம் முடித்துவிட்டு வர ஏறக்குறைய ஒரு வாரமாகிவிட்டது. திரும்பியதும் கையெழுத்துப் போட வேண்டிய காகிதங்கள் நிறையவே இருக்க "குட்மார்னிங் ஸார்" என்று குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தார். சாயா நின்று கொண்டிருந்தாள். லேசாக சற்றே பயந்து சிரித்துக் கொண்டு.

"ஓ மைகாட்! நீ எப்ப வந்தே சாயா?"

"நேற்று."

"என்னிடம் சந்திரன் சொல்லவே இல்லேயே. உட்கார். எங்கே தங்கியிருக்கிருய்?"

"மாரிஸ் ஓட்டலில்"

"அறை எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா?"

"இருக்கிறது. ஏர் கண்டிஷண்ட் அறை! எனக்கு என்ன வேலே என்று யாரும் சொல்லவே இல்லே."

"சொல்கிறேன், உட்கார்."

அவள் நாற்காலி விளிம்பில் உட்கார்ந்து கொண்டாள். அவரை நேராகப் பார்க்கத் தயங்கிஞள். இவளுக்கு ஏதாவது வேலே கொடுத்தாக வேண்டும். என் ஆபிஸ் வேலேயைக் கொடுப்பதில் அர்த்தமில்லே. இருந்தும் இவளே வீணே வைத்திருப்பதும் நல்லதல்ல. அல்லது இப்போதே விஷயத்தைப் போட்டு உடைத்துவிடலாமா? வேண்டாம் வந்த அன்றே. இல்லே எங்கே போகிருள், இனி இவள் திரும்ப பூஞ செல்லப் போவதில்லே. இங்கேதான் என் நிரந்தர நிரந்தர...

"கன் ஐ கோ ஸார்?"

"இரு. இன்றிரவு என்ன செய்யப் போகிருய்?"

"இருக்கிற துணியையெல்லாம் தோய்க்க வேண்டும்."



"'ஏண்டா சேகர்! கல்யாணத்துக்குப் பெண் பார்க்கப் போனயே, என்னாச்சு?''

''பெண் நல்லாத்தான் இருக்கா... ஆனா அவ காலேஜ் டிபேடிங் போட்டிகளில் நிறையப் பரிசுகள் வாங்கியிருக்காளாம்! அதை நினைச்சாத்தான் பயமாயிருக்கு!''

---

''அதெல்லாம் அப்புறம். நீ என்னுடன் வருகிறாய்.''

''எங்கே.''

''தெரிந்து கொள்வாய் விரைவிலேயே!''

* * * * *

வீட்டுக்கு போன போது மனைவி தயாராகக் காத்திருந்தாள் பட்டுப்புடவையும், அம்மன் குங்குமுமாக.

''எங்கே போறப்பலே'' என்றார்.

''அட! கேக்கறதைப் பாரு. இன்னைக்கு என்ன கிழமை, என்ன தேதி'' என்றாள்.

''ஆமா! மேல் மருவத்தூரு! இத பாரு செல்லம். இன்னைக்கு எனக்குத் தலை போகிற காரியம். நீ மட்டும் போயிட்டு வாயேன்.''

''ரெண்டு பேருமாத்தானே வரதா வேண்டுதலை! இத பாருங்க. நீங்க என்ன வேணா செய்யுங்க. வேண்டுதலையை காத்திலே விட்டுடாதிங்க! வாரத்திலே ஒரு நாள் ஒண்ணரை மணி உங்களுக்கு வீட்டுக்காக செலவழிக்க கஷ்டமா இருக்குதா? அதுவும் யாருக்கு? உங்க மக! உங்க ரத்தம்! அதோட நல் வாழ்வுக்காகத்தானே!''

''அவங்கபாட்டுக்கு அமெரிக்காவிலே என்ஜாய் பண்ணிக்கிட்டு இருக்காங்க. நாம தான் கிடந்து அல்லாடறோம்.''

''ஒரு மணி நேரம் உங்க குடும்பத்துக்காக ஒதுக்க முடியாதுன்னா எதுக்காக சம்பாதிக்கணும்''.

சரி இதோடு எதற்கு வம்பு என்று புல்கை சட்டை சரிகை வேட்டிக்கு மாற்றிக் கொண்டார். சந்திரனுக்கு போன் பண்ணி "எட்டரை மணிக்கு காஸ்மாபாலிட்டன் கிளப்புக்கு கொண்டாந்துரு" என்றார்.

''சரி.''

''வா. செல்லம். போயிட்டு சீக்கிரமே திரும்பிரலாம். உன் பிரார்த்தனையை ஏன் கெடுக்கணும்!''

''என்னமோ, எனக்கு விட்டு கொடுக்கறாப்போல பேசறீங்களே, உங்களுடைய நல்லதுக்காகத்தான் • முக்கியமா வேண்டிக்கிட்டது. ஞாபகம் இருக்கட்டும். நீங்க அப்ப நெஞ்சு வலிக்கு....''

''நெஞ்சு வலி இல்லை. செல்லம்! டாக்டரே சொல்லிட்டாரே அஜீரணம்ட்டு''.

இப்போது வேறு விதமான நெஞ்சு வலி! இதை யாரிடம் சொல்லப் போகிறேன்.

* * * * *

அவ்வளவு தூரம் காரில் போய்விட்டுத் திரும்ப ராத்திரி ஒன்பதாகிவிட்டது. நெற்றியில் குங்குமத்தை அழித்துவிட்டு கிளப்புக்கு போனார். தனியாக அந்தப் பெண் புல் வெளியில் பிரம்பு மேசையருகில் உட்கார்ந்திருந்தாள். அவரைப் பார்த்ததும் சந்திரன் மரியாதையாக ஓரத்திலிருந்து விலகி வந்து நின்று ''ராத்திரி எத்தனை மணிக்கு மறுபடி கார் வேண்டும்?'' என்றான்.

''பதினொரு மணிக்கு.''

சரி என்று கிளம்ப இருந்தவனை "தகவல் தெரிந்ததா?" என்றார்.

''இல்லை. ஒரு வாரம் வேண்டும்?''

''அவளை அழைத்து வருவதில் ஏதாவது சிக்கல் இருந்ததா?''

''இல்லை... இந்தப் பெண்ணை அடைவதில் உங்களுக்கு சிரமம் இருக்காது என்பது என் அபிப்ராயம்.''

''ஷி இஸ் மாரிட் சந்திரன்!''

''பரவாயில்லை.'' என்று மரியாதையுடன் புறப்பட்டுச் சென்றான்.

பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தவள் லைம் ஜூஸ் டம்ளரில் உறிஞ்சப் படாமல் காத்திருக்க அவர் வருவதைக் கண்டதும் எழுந்து நின்று சிரித்தாள். புடவையைப் போர்த்திக் கொண்டாள். லேசாக அலங்காரம் பண்ணியிருந்ததே ஜனார்தனுக்குப் போதுமானதாக இருந்தது. வாய்க்காலைத் தாண்டி கடற்கரை தெரிய மிகப் பெரிய வெளிப்புற சினிமா திரையொன்று சும்மா இருந்தது. ''ஸாரி! டிட்யூ ஹேவ் டு வெயிட்?''

''ஒரு அரை மணியாயிற்று. சந்திரன் சொன்னார் முக்கியமான ஆபிஸ் அலுவல் ஒன்று எனக்கு அளிக்கப் போகிறீர்கள் என்று... அதைப்பற்றிப் பேசத்தான் அழைத்து வந்தார்.''

உள்ளுக்குள் சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டு, ''ஆம். முக்கியமான அலுவல் தான். அதற்கு முன்னால் என்ன சாப்பிடுகிறாய்?''

''ஃப்பெரஷ் லைம் நன்றாகவே இருக்கிறது! சுற்றிலும் பார்த்து இந்த இடம் பிரமாதமாக இருக்கிறது. சென்னையில் இத்தனை இரைச்சலின் நடுவே அமைதியான தீவு போல. சினிமா காட்டுவார்களா?''

"வெள்ளிக்கிழமைதான்! சினிமா பார்க்க வேண்டுமா?"

"இல்லை. இன்றில்லை! எனக்கு எல்லாமே புதிதாக இருக்கிறது. எல்லாமே புரியாத மாதிரி இருக்கிறது".

"என்ன புரியவில்லை?"

"நீங்கள் எனக்கு இவ்வளவு சலுகை தருவது!"

"என்ன சலுகை தந்தேன்."

"நல்ல ஓட்டல். நல்ல அறை. எம். டி. யுடன் கேவலம் என் போன்ற ஆபிஸ் அஸிஸ்டெண்டு உரையாடும் வகையில் தனிப்பட்ட கிளப்பில் அனுமதி... இதெல்லாம் எதற்காக என்று புரியவில்லை."

"ஜஸ்ட் தட் ஐ லைக் யூ சாயா!"

"ஏதாவது வேறு காரணம் இருக்க வேண்டும். இன்று ஆபிசில் எத்தனையோ பெண்களைப் பார்த்தேன். என்னை பூனாவிலிருந்து வரவழைத்து பாஷைதெரியாத ஊரில்வேலையேதும் கொடுக்காமல் சும்மா வைத்திருப்பதன் காரணம் நான் நினைக்கிறபடியென்றால் அது நம் இருவருக்கும் நல்லதல்ல."

"நீ என்ன நினைக்கிறாய்?"

"தட் யூ வாண்ட் மி, யூ லைக் மி, ஏதோ ஒரு விதத்திலே என்னை நீங்கள் விரும்புகிறீர்கள் என்று. எதற்கோ என்று தெரியவில்லை. ஒருவேளை நான் உங்கள் வாழ்விலிருந்து விலகிப் போய்விட்ட ஏதாவது பெண்ணை ஞாபகப்படுத்துகிறேனோ இல்லை உங்கள் மகள் அல்லது..."

"அதெல்லாம் இல்லை. ஐ ஜஸ்ட் லைக் யூ தட்ஸ் ஆல்!"

"நான் வந்து என்ன செய்ய வேண்டும்?"

"ஒன்றும் செய்ய வேண்டாம். நீ நீயாக இரு போதும்."

"நான் கல்யாணமானவள் என்று உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்."

"தேவையில்லை. அன்றைக்குப் பார்த்த உன் கணவனை என்னால் மறக்க முடியாது. என்ன ஒரு விதி இது! தேவதை போன்ற உனக்கு — மன்னிக்கவும் — ராட்சசன் போல தோற்றம் கொண்ட கணவன்".

அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள். "விதி" என்றாள்.

"விதியை மாற்றலாம். எதற்காக கல்யாணம் செய்து கொண்டாய்? ஏதாவது கடன் தொல்லையா? கட்டாயமா? எப்போ கல்யாணம் ஆயிற்று?"

"அது ஒரு விதமான கட்டாயக் கல்யாணம்! அதைப் பற்றி பேசி எதற்காக இந்த மனோகரமான மாலைக் காலத்தை விரயமாக்க வேண்டும்.!"

---

கீழிருந்து முகத்துக்கு அடித்த வெளிச்சத்தில் சில வாத்தியக்காரர்கள் "ஹலோ" என்று பாடினார்கள்.

"லியோனல் ரிச்சி" என்றாள். "உங்களுக்கு மேற்கத்திய சங்கீதம் பிடிக்குமா?"

"எனக்கு இன்றைய தேதிக்கு பிடித்த விஷயம் ஒன்றே ஒன்றுதான்."

"சொல்லவேண்டாம்" என்று நகத்தைப் பார்த்துக் கொண்டாள். அவள் கையை அவர் வாங்கிக் கொள்ள விரும்பினார். அதை மிக இயல்பாகத் தடுத்தாள். ஜனார்தனுக்கு அவளை ஒருமுறை தொட்டதிலேயே மூளைக்கு ரத்தம் ஜிவ்வென்று பாய்ந்தது.

"அவர்களுடன நடனமாட விருப்பமா உனக்கு."

"யாராவது இளைஞர்களாக இருந்தால் சரி!" என்று சுற்றும் முற்றும் பார்த்துச் சொன்னாள். சுருக்கென்றது!.

டின்னர் ஆர்டர் செய்து அவள் நுனிவிரலால் சாப்பிடுவதையும் அவள் நீர் அருந்தும் போது உதடுகள் கண்ணாடி விளிம்பை லேசாகத் தொட்டதையும் கைக்குட்டையை எடுத்து நுனி உதட்டை துடைத்துக்கொண்ட லாகவத்தையும் ரசித்தார். ஒரு கையால் தூக்கிவிடலாம் போல இருந்தாள். அதிகப்படியாக மார்பில்லாமல்..."யூ வில் பி எ குட் மாடல்."

"ஐ வாஸ்! மாடலிங் பண்ணிக்கொண்டிருந்தேன். எப்படித் தெரியும்?"

"உன் உடல்! ஏன் விட்டு விட்டாய்?"

"பிடிக்கவில்லை."

"ஏன்?"

"ஸம் திங் பர்ஸனல். இன்றைக்கு மாதிரி ஒரு சூழ்நிலை!" என்றாள்.

அவர் அவளைப்புரியாமல்நிமிர்ந்துபார்த்தார். "விவரமாகச் சொல்லேன்."

"வேண்டாம்." என்றாள். சந்திரன் சரியாக பதினொருமணிக்கு வந்தான். டிரைவரை அனுப்பிவிட்டு அவனே ஓட்டி வந்திருந்தான். பில்லில் கையெழுத்து போட்டு விட்டு நூறு ரூபாய் டிப் வைத்து விட்டு புறப்பட்டார். "சில்லறை வாங்கிக் கொள்ளவில்லையா?" என்றாள்.

"இல்லை."

"இன்றைக்கு நாம் எவ்வளவுக்கு சாப்பிட்டிருப்போம்?"

"நைன் ஹண்ட்ரட். ஸ்காட்சையும் சேர்த்துத்தான்!"

"எதற்கு இப்படி பணத்தை விரயம் செய்கிறீர்கள்?"

"இன்கம் டாக்ஸ்" என்றார். "கம்" என்று அவள் தோளில் கைவைத்து அணைத்து அழைத்துச் செல்ல காரின் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டு "ஹலோ மிஸ்டர் சந்திரன்" என்றாள்.

அவன் அரைகுறையாக 'லோ' என்றான. பின் சீட்டில் அவளருகே உராய்ந்து உட்கார சந்திரன் "பீச்சுக்கு போகலாமா?" என்றான்.


"நோ. ஸாரி ஸார். களைப்பாக இருக்கிறது. ராத்திரி".

"கமான் பேல்பூரிவாங்கிசாப்பிடலாமா, குஜராத்தி உணவுப் பண்டம் ஏதாவது?"

"ஸம் அதர் டைம், சந்திரன் என்னை ஓட்டலில் கொண்டு விட்டால் மிகவும் நன்றி."

சந்திரன் மௌனமாக காத்திருக்க, "சரி" என்றார்.

சந்திரன் காரை எலியட்ஸ் பீச் வழியாக எடுத்துச் சென்று ஒரு தனியிடத்தில் நிறுத்தி



''ஒரு நிமிஷம்! எனக்கு பான் வாங்க வேண்டும்'' என்று வெளியே சென்றான்.

குறிப்பறிந்த அவன் கெட்டிக்காரத் தனத்தை வியந்து அவர் சாயாவின் பக்கம் திரும்பி வெல் என்று அவள் மார்பைத் தொட்டார்.''


அவள் சற்றே தயங்க மற்றொரு கையால் அவளை முழுவதும் அணைத்துக் கொண்டார்.

அவள் அவரை தடுத்து நிறுத்த முயற்சி செய்தாள். ''ஸார் ப்ளீஸ். நீங்கள் செய்வது தப்பு. நான் கல்யாணம் ஆனவள். எனக்கு கணவன் இருக்கிறான். இது எந்த தர்மத்தின் படியும் தப்பு.''

''தர்மம் எல்லாமே தப்பு'' என்று முகத்தில் உரசினார்.

''ஸார், நான் உங்கள் மகள் போல....''

அவளுடைய இதயம் அடித்துக் கொள்வதை நேராக விரல்களால் உணரத் தலைப்பட்டவர் சட்டென்று கையை எடுத்துக் கொண்டார். ''அப்படிச் சொல்லாதே! யூ ஆர் நாட் மை டாட்டர் சாயா.'' மெர்க்குரி விளக்கில் அவள் கண்களில் கண்ணீர்



தெரிந்தது. "ஸார் ப்ளீஸ். நீங்கள் இரண்டு பேர் இருக்கிறீர்கள். நல்ல வலுவான ஆண் பிள்ளைகள். நான் பாஷை தெரியாது இங்கு வந்து சேர்ந்த பெண். என்னை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். ஆனால் இதை நீங்கள் விரும்புகிறீர்களா? உங்களுக்கு வேண்டியது என் சம்மதமா? என் உடலா? பலாத்காரமா?"

சற்று நேரம் யோசித்து விட்டு "ஸாரி" என்றார்.

"கணவன் இருக்கிற போது என் மனம் என்ன வேதனைப்படும் யோசித்துப் பாருங்கள்."

"கணவன் இல்லையென்றால்".

"அந்தப் பேச்சே இல்லையே இப்போது"

சந்திரன் அதற்குள் வந்து விட்டான். "போகலாமா?" என்றான்.

"போகலாம் மிஸ்டர் சந்திரன். தக்க சமயத்தில் வந்தீர்கள்" என்றாள்.

மௌனமாக அவளை ஓட்டல் வாசலில்

கொண்டு விட்ட போது "குட் நைட்" என்று சொல்லிவிட்டு கண்ணைத் துடைத்துக் கொண்டே சென்றாள்.

வீட்டுக்குத் திரும்புகையில் சந்திரன் "இது தொடரப்போகிறதா?" என்றான்.

"எது?... சந்திரன் கேள்! இந்தப் பெண்ணை நான் பலாத்காரம் செய்ய விரும்பவில்லை. அது என் இயற்கைக்கு ஏற்றதல்ல. இவளாக எந்தவித தடையும் இல்லாமல் என்னிடம் வர வேண்டும்."

"கணவன் இருக்கிறான்!"

"தென் கெட் ரிட் ஆஃப் ஹிம்!" என்றார் சற்று இரைச்சலாக.

சந்திரன் சற்று நேரம் மௌனமாகிப் பிறகு, "யோசித்துச் சொல்கிறேன்" என்றான்.

## 6

அதன் பின் அவளை அந்த வாரம் முழுவதும் பார்க்க முடியவில்லை. சந்திரன் தான் அவளுக்கு வேலை கொடுத்திருக்க வேண்டும். ஒரு முறை கூப்பிட்டுக் கேட்டதில் அவளுக்கு எம். டி. ஆபிஸிலேயே பார்ட்டீஷன் போட்டு இன்வர்ட் அவுட்வர்ட் என்று பிரித்து தனியாக அவளை உட்கார வைத்திருப்பதாகச் சொன்னான். "யாரிந்த செல்லக் குழந்தை" என்று அனுவசியமாக வம்பு வரும். அதைத் தவிர்ப்பதற்காக என்றான். ஜனார்தன் பேச்சு வந்தாலும் கவலைப்படுகிறவராக இல்லை. இவளுக்காக இந்தக் கணத்தில் தன் அந்தஸ்து முழுவதையுமே தன் வாழ்நாளில் சிறுகச் சேகரித்து வைத்திருந்த பெரிய மனுஷத் தன்மை அத்தனையுமே இழந்தாலும் பரவாயில்லை என்று தோன்றியது. அப்படிப்பட்ட நிலையில் இருந்தார். ஏதாவது ஒரு காரணத்துக்காக அவளை தினம் ஓரிரு முறையாவது பார்க்க முடிந்தது. மிஸஸ் ப்ரகன்ஸாவுடன் சந்தேகம் கேட்க வருவாள். ஒரு முறை டெலக்ஸ் கொடுக்க வருவாள். அப்போதெல்லாம் அவரைப் பார்த்து புன்னகை செய்தாள். காஸ்மாபாலிட்டனில் நடந்ததைப் பற்றி கண்டு கொள்ளவில்லை என்று தெரிந்தது. ஒவ்வொரு நாளும் அவள் உடை என்ன உடுத்திக் கொண்டு வந்திருக்கிறாள் என்று பார்க்க ஏதுவாக ஒரு அரைக் கதவு திறந்தே இருந்தது. சந்திரன் இந்தவிதத்தில் கெட்டிக்காரன். இவள் பார்க்காமல், அவர் பார்க்கிற மாதிரி உட்கார வைத்திருந்தான்.

அவளே ஒரு நாள் "ஸார் நான் உங்களுடன் பேச வேண்டும்" என்றாள்.


"சொல்லு சாயா."

"அன்றைக்குநான் நடந்து கொண்டதை தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே?"

"சேச்சே."

"என்னதான் நாம் முன்னேற்றம் அடைந்து விட்டாலும்..."

"ஓக்கே. ஓக்கே. கட்டின கணவன அண்ட் ஆல்தட்!"




"நாம் இன்னும் மேல் நாடுகள் போல.."

"புரிகிறது சாயா. நீ செய்தது எந்த இந்தியப் பெண்ணும் செய்யக் கூடியதே. நான்தான் அவசரப்பட்டு மூர்க்கத்தனமாக நடந்து கொண்டு விட்டேன்."

"நீங்கள் என் மேல் காட்டும் அன்பைத் திருப்பித் தர முடியவில்லையே என்பதுதான் என் குறை. கல்யாணமாகாதவளாக இருந்தால் உங்களுக்குச் சம்மதிப்பதில் எந்தவிதத் தயக்கமும் காட்ட மாட்டேன் என்று மட்டும் சொல்ல முடியும்."

"புரிகிறது. தாங்ஸ்".

"என்னால் வேறு ஏதாவது உங்களுக்குச் செய்ய முடிந்தால் பெருமைப்படுவேன்."

வேறு ஏதாவது என்றால்?

"செக்ஸ் தவிர வேறு ஏதாவது".

அவர் சிரித்து "யோசிக்கிறேன். ஆனால் உன்னிடம் நான் விரும்புவது செக்ஸ் மட்டும் இல்லை" என்றார். அவள் புறப்படுவதற்கு முன் "ஸார். மற்றொரு விஷயம். உங்களிடமிருந்து உதவி தேவைப்படுகிறது."

"என்ன?"

"எனக்கு இந்த ஓட்டலிலிருந்து அலுத்து விட்டது. கட்டிப் போட்டாற்போல இருக்கிறது. நான் சொந்தமாக சமைத்துக்கொள்ள விரும்புகிறேன். கம்பெனி கெஸ்ட் ஹவுஸில் ஒரு அறை கொடுத்தால் கூடப் போதுமானது!"

"கெஸ்ட் ஹவுஸ் காலியா என்பது தெரியவில்லை. நீ எதற்கும் சந்திரனிடம் கேள். அவன் ஏற்பாடு செய்வான்."

"தாங்ஸ் ஸார்."

அவள் போகுமுன் "சாயா" என்றார். திரும்பிப் பார்த்தாள்.

"நீ சொன்னது உண்மையான வார்த்தை தானே? உன் கணவன் மட்டும் இல்லாமலிருந்தால் என்னை ஏற்க உனக்கு எவ்வித தயக்கமும் இல்லை..."

நிச்சயம் அதுதான் ஆழ்ந்த உண்மை!

கல்யாணமானவளாக இருப்பதால்சிலசமூக நியதிகளுக்கும், விதிமுறைகளுக்கும்...''

''புரிந்து விட்டது. உன்னை நான் தற்போது தொந்தரவு செய்ய மாட்டேன்'' என்ருர்.

அவள் சென்றதும் சந்திரனை டெலிபோனில் கூப்பிட்டார். ''தகவல் தெரிந்ததா?''

''இதையெல்லாம் டெலிபோனில் பேசக் கூடாது. அறைக்கு வருகிறேன்.''

சந்திரன் அவருக்கு எதிரே உட்காரவே மாட்டான். அரை மணி ஒரு மணி நேரமானலும் சரி.

''அந்த ஆள் பெயர் வினய் பவ்டேகர். மராட்டா ஏஜென்ஸி என்பது ரொம்ப 'பொங்கி' கம்பெனி. ஒரு காலத்தில் மனித மயிரை ஏற்றுமதி செய்ததாக தகவல். இப்போது ஒரு மயிரும் இல்லை!. எம். ஆர். எக்ஸ். 8234 என்கிற வெஸ்பா ஸ்கூட்டர் வைத்திருக்கிருன். கல்யாணமானவன். சோமவார் பேட்டையில் ஒரு அட்ரஸ் இருக்கிறது! தினம் சிஞ்சுவாடு ஆபிஸ் போவதற்கு ஸ்கூட்டர்...''

''சரி. இதெல்லாம் தெரிந்து என்ன செய்யப் போகிருய்?''

''எனக்கு நாற்பத்தைந்தாயிரம் ரூபாய் வேண்டும் சாயங்காலத்துக்குள். கேஷாக!''

''எதற்கு?''

''ஒரு ஸ்கூட்டர் விபத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் பூனாவில்!''

ஜனர்தன் சந்திரனை ஏற இறங்கப் பார்த்தார்.

''என்ன சொல்கிருய்?''

''நீ நீங்கள் தானே சொன்னீர்கள், அப்புறப்படுத்து என்று, 'கெட் ரிட் ஆஃப் ஹிம்'!''

''ஆமாம். ஆனல்...''

''உங்களால் பெண்ணை மறக்க முடியுமா?''

''முடியாது. தீர்மானமாக முடியாது.''

''அவள் கணவனை விட்டு விட்டு வருவாளா?''

''வரமாட்டாள்.''

''வேறு வழி ஏதேனும் இருந்தால் சொல்லலாம்.''

ஜனர்தன் யோசித்தார். இல்லை, ''எப்படி செய்யப் போகிருய்?''

''நானில்லை. வேறு பார்ட்டி.''

''எப்படி?''

''சொன்னேனே! ஸ்கூட்டர் விபத்து.''

''எப்படி?''

சந்திரன் அவரை நேராகப் பார்க்காமல், ''உங்களுக்கு எதற்கு விவரங்கள்?''

''என்ன ஆகும்?''

''திவ் மி டென் டேஸ்! பத்து நாளில் செய்தித் தாளில் செய்தியுடன், வேண்டுமென்ருல் டெத் சர்ட்டிபிகேட்டும் கிடைக்கும்.''

''அடப்பாவி!''

''நான் செய்யப் போவதில்லை. நான் மைலாப்பூரை விட்டு விலக வேண்டாம்.. கொஞ்ச நாள் துக்கத்திலே இருக்கட்டும் அவள். சமாதானம் சொல்லலாம். ஆறுதல் சொல்லலாம். அதன் பின்...''

''சந்திரன் உனக்கு எவ்வாறு...''

''வேண்டாம். மற்றொரு ஏற்பாடு செய்திருக்கிறேன். அவளுக்கு ஆள்வார்பேட் ஃப்ளாட்டை கொடுத்திருக்கிறேன். அதன் சாவி உங்களிடம் இருக்கிறது என்று எண்ணுகிறேன். என் யோசனைப்படி அவசரப்பட வேண்டாம். பத்து நாள் விட்டுப் போகலாம், செய்தி கிடைத்ததும். ஆறுதல் சொல்லி... அவசரமே வேண்டாம்.''

''சந்திரன் யூ ஆர் எ ஜீனியஸ்!''

என்று சொல்லி முடிப்பதற்குள், ''வருகிறேன்'' என்றுமறைந்துவிட்டான்சந்திரன்.

## 7

அடுத்த தினங்களில் ஜப்பானிய டெலிகேஷன் ஃபாக்டரிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஒப்பந்தத்துக்கு விருப் போதும் ஃபிஞன்ஸுடன் ஃபார்வர்டு ப்ளான் பற்றிப் பேசும் போதும், பூனவுக்கும், டெல்லிக்கும், ஆல்வாருக்கும், ஆனந்த நகருக்கும் டெலிபோன் பேசும் போதும் அவ்வப்போது வயிற்றுக்குள் படபடத்தது. டெலிபோன் அடிக்கையில், தபாலில் பரிச்சயமில்லாத கடிதத்தைப் பார்க்கையில் எல்லாம் செய்தி அதுவாகஇருக்குமோ,அதுவாகஇருக்குமோ என்றுதான் படபடப்பாக இருந்தது. என்ன காரியம் செய்கிரேம். ஒரு தனிப்பட்ட இச்சையின் அக்கினியை ஆக்கிரமிப்பை சமாளிக்க முடியாமல் ஒரு பெயர் தெரியாதவனை கொல்ல ஏற்பாடு செய்வது எத்தனை

---

மாதர் சங்கத்தில் ஓர் அறிவிப்பு:

வருகிற புதன்கிழமை நமது சங்கத்தில் ஒருவர் புதுவித பலகாரம் தயாரிக்க நமக்குச் சொல்லித்தரவிருக்கிருர். எனவே அன்று அனைவரும் அவர்களது கணவன்மார்களை மட்டுமே அனுப்பி வைத்தால் போதுமானது.

— ஜா. ரவி



பாவம்! பாவம் மனதிலா? செயலிலா? நான் என்ன பாவச் செயல் செய்தேன்? நாற்பத்தைந்தாயிரம் செலவழிப்பது? இதற்காக செலவழிப்பது பாவம் இல்லையா? அப்படியென்றால் மோட்டார் கார் வைத்திருப்பது பாவம்தான்! சாலை விபத்து! இது விபத்துத்தான். சாலை விபத்தல்ல. அவள் என் கண்களில் பட்டது விபத்து. அவள் என் கண்களில் பட்டதுதான் விபத்து!

என்னுடைய பிடிவாதத்தை மாற்ற மறுபடி என் பிள்ளைப் பருவம் வரைச் சென்று வளர்ந்த விதத்தையே மாற்ற வேண்டும்... இட்ஸ் டு லேட் நௌ.

சென்னைக்கு... "என்ன சாயா?" சாயா தைரியம் பெற்று விட்டாள். கேட்காமல் அறையில் நுழைகிறாள்.

"நான் உங்களுக்கு அதிகம் தொந்தரவு கொடுக்கிறேன்."

"சேச்சே. அப்படி யார் சொன்னது? புது வீடு எப்படி இருக்கிறது?"

"அதைப்பற்றித்தான் சொல்ல வந்தேன். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை."

"சொல்ல வேண்டாம். ஃப்ளாட் சௌகரியமாக இருந்தால் சரி."

"என் ஒருத்திக்கு ரொம்பப் பெரிய ஃப்ளாட் அது."

"அதை உன் பேருக்கு எழுதி வைக்கத் தயார் நான்!"

"ஐ டோண்ட் டிஸர்வ் இட் ஸார்!"

"சாயா நீ எனக்கு எதையும், எதையுமே திருப்பித் தர வேண்டாம். என் முன்னிலையில் நீ சந்தோஷமாக இருந்தால் அதுவே போதும்."

"அந்த ஃப்ளாட் நிஜமாகவே அழகாக இருக்கிறது. சமையலறையில் எத்தனை வசதி இருக்கிறது? ஃபர்னிஷிங்ஸ், கலர் டி. வி. நான் என்ன பாக்கியம் செய்தேன்!"

"என் கண்ணில் பட்டாய்".

"நான் உங்களுக்கு ஒரு விருந்து கொடுக்க விரும்புகிறேன்!"

அவளைக் கேள்விக் குறியுடன் பார்க்க, அவள் சிரித்து "ஜஸ்ட் எ டின்னர்" என்றாள். "நான் சமைப்பதை நீங்கள் சுவைக்க வேண்டும்."

"சரி."

"எப்போது வருகிறீர்கள்."

"கொஞ்சம் பொறு. கொஞ்சம் பொறு."

'நிச்சயம் வர வேண்டும்' என்று அவரை பெரிசாகப் பார்த்து முழுசாக சிரித்து விட்டுப் போனாள். ஜனார்த்தனுக்கு கவலைகள் விலகிப் போய் இவளை அடைவதற்கு எந்த விதமான தப்பும் செய்யலாம் என்று ஆகி விட்டது. சந்திரனின் சாமர்த்தியத்தை வியந்

NOT FOR SALE
FAN MADE ONLY
COMICS PDF TIMES

தார். யாரும் அறியாமல் அவளை ஒரு வித மான "சின்ன வீட்டில்" வைத்து விட்டான். இனி என்ன? பூனாவிலிருந்து ஒரு செய்தி வர வேண்டும். முகத்தைச் சீரியஸாக வைத்துக் கொண்டு அவளிடம் போய் சொல்ல வேண்டும். "பயப்படாதே, கவலைப் படாதே, சாயா. நான் இருக்கிறேன், உன்னைக் கவனித்துக் கொள்ள. நான் உன்னை சுவீகரித்து விட்டேன். விதி நம் இருவரையும் சேர்த்து விட்டது". இத்யாதி..

ஜனார்த்தன் லேசாக தனக்குள் பாடிக் கொண்டார்.

வீட்டுக்கு போன போது மனைவி "இன்னைக்கு உங்க கூட பேசணும்" என்றாள்.

"எதைப் பத்தி".

"உங்க ஆபிசைப் பத்தி".

"ஆபிசைப் பத்தி நீ என்ன பேசறது?"

"பூனாவிலிருந்து ஒரு பொண்ணை கூப் பிட்டு நம்ம ஆள்வார்பேட் வீட்டிலே வெச் சிருக்கீங்களாமே!"

"யார் சொன்னது!"

"ஆபிஸ் முழுக்க பேசிக்கிறதா சொன் னாங்க."

"உனக்கு யாரும்மா சொன்னது?"

"யாருன்னு சொன்னா அவங்க மேலே பாய்வீங்க. சொல்றதே இல்லேன்னு வாக்குக் கொடுத்திருக்கேன்."

"யார் சொன்னாங்க உனக்கு?" என்று குரலை உயர்த்தினார்.

"கோவிச்சுக்கறீங்க நிஜம்! அதனால்தான் கோபம்."

"சந்திரன் சொன்னானா ?"

"சே அவன் ஊமைக்கோட்டான்னா! இத பாருங்க யாரு சொன்னா என்ன? ஆபிசே அல்லாடுது .

"நீங்க செய்யுறது நல்லால்லே! அவளை நேரப் போய்க்கேக்கப் போறேன். கல்யாண மான கழுதையாம்."

"இதபாரு. வதந்திங்களை நம்பாதே!"

"வதந்தி இல்லீங்க. இப்ப ஆள்வார்பேட் ஃப்ளாட்டுக்குப் போய் பார்த்துட்டு வரலாங் களா?"

"அந்தப் பொண்ணுக்கு தங்கறதுக்கு இடமில்லேன்னு..."

"இந்த ஊர்லே இல்லாத பொம்பளைங் களா, பூனாவிலிருந்து வரவழைச்சீங் களாமே!

"இதப் பாருங்க உங்களையே பூஜை பண்ணிகிட்டு உங்களை விட்டா வேறே கதி ஏதும் இல்லாமல் உங்களுக்காக விரதம் இருந்து சனிக்கிழமை பட்டினி கிடந்து... எனக்குப் போய் துரோகம் பண்றீங்களே, அடுக்குமா உங்களுக்கு."

"வேணா உனக்கு ஒரு கோயில் கட்டிர லாம்."

"எனக்கு வேறு வழி இல்லேன்னு தானே!"

"இதப் பாரு என்ன பண்ணச் சொல்றே. உன் துரதிர்ஷ்டம் என்னைப் போல கிரா தகனை கல்யாணம் பண்ணிக்கிட்டே."

"அப்ப அது உண்மையா?"

"எது?"

"நான் கேள்விப்பட்டதெல்லாம்."

"நீ என்ன கேள்விப்பட்டிருக்கேன்னு எனக்கு என்ன தெரியும்?"

"அதான் சொன்னேனுங்களே!"

"இதப் பாரு ஒரு பத்து நாள் பொறு. என்னைத் தொந்தரவு செய்யாதே!"

"பத்து நாள்ள என்ன நடக்கப் போவுது."

"சொல்றேன். பத்து நாள் பொறு!"

## 8

சந்திரன் கேஷாக இரண்டு தவணையில் நாற்பத்தைந்தாயிரம் வாங்கிக் கொண்டான். மேலே தேவைப்படாது என்றான். "இதுவே அதிகம்." சந்திரன் ஏமாற்ற மாட்டான் என் பது இந்தக் காரியத்தை நடத்திய உணர்ச்சி யற்ற முறையிலேயே தெரிந்தது. சந்திரன் என்னை ப்ளாக்மெயில் செய்யலாம். பிற் காலத்தில் ரொம்ப தொந்தரவு கொடுக்க லாம். உன் ரகசியத்தையெல்லாம் அம்பல மாக்குவேன் என்று பயங்காட்டலாம். பர வாயில்லை! என்ன வேண்டுமானாலும் ஆகட்டும்! சாயா கிடைத்து விட்டால் போதும். சாயா! நிழல்! நிழலைத் தேடி...

## 9

புதன் கிழமை யூனியனுடன் வேஜ் ரிவி ஷன் பற்றிய ஒப்பந்தத்தை பர்ஸானல் ஆசாமிகள் கையெழுத்துப் போடுவதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்களுடன் சிரித்துப் பேசிவிட்டு சேர்ந்து உண்டு விட்டு தன் அலுவலக அறைக்குத் திரும்பி வந்த



அவள்: உன் வீட்டுக்காரர் எப்பவும் உனக்கு ஏட்டிக்குப் போட்டிங்கறையே எதை வைச்சுச் சொல்லறே?

இவள்: நேற்று அவரோட வெளியே போகும்போது நான் என் பின்னலை எடுத்து முன்னடி போட்டுக்கிட்டேன். உடனே அவர் தன் டையை எடுத்துப் பின்னடி விட்டுட்டார்!

— கே. ஆர். எம்.

நான், ஒவ்வொரு மாசமும் எப்படாப்பா முடியும், புது **கோதலம்** என்னிக்கு வரும்னு ஆசையா காத்துக்கிட்டிருப்பேன்... நீயும் அப்படித்தானே!



புகைப்படம்: ஏ.வி. பாஸ்கர்

போது சந்திரன் வெளி அறையில் இருந்த 'ஸ்பான்' இதழைப் புரட்டிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டது. அவன் மிகவும் சாந்த சொரூபனாக இருந்தான். 'உள்ளே வா' என்று உடன் அழைத்துச் சென்றார். இண்டர்காமின் பொத்தானை அழுத்தி "அரை மணிக்கு தொந்தரவு செய்யாதே. ஏதும் கால் போடாதே" என்றார்.

சந்திரன் உட்காராமல் பவ்யமாக நின்று கொண்டு "வேலை முடிந்துவிட்டது." என்றான்.

"என்னது! எப்போது?"

"மூன்று நாள் முன்பே முடிந்து விட்டது. இன்றைக்குத்தான் தகவல் தெரிந்தது போன் மூலம். அப்புறம் இது தபாலில் வந்தது" என்றுபைக்குள்ளிருந்துஎடுத்துக்காட்டினான்.

பூனாவிலிருந்து வெளி வரும் 'மராட்டா டைம்ஸ்' என்னும் செய்தித் தாளிலிருந்து ஒரு துண்டு. அழகாக ஒரு வெள்ளைக் காகிதத்தின் மத்தியில் ஒட்டப்பட்டு.

ஸ்கூட்டர் ஓட்டி மரணம்: பூனா மார்ச் 20.

"நேற்று இரவு சின்ச் வாடு நோக்கிச் செல்லும் ஹைரோடில், சாலை விபத்தில் திரு வினய் பாவ்டேகர் என்கிறவர் இறந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. அவருடைய ஸ்கூட்டர் வாகனம் சாலையில் கிடந்ததாகவும் ஒரு லாரியால் அடித்து விபத்து ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. போக்குவரத்து போலிஸ் கவனக் குறைவு வழக்கு ஒன்று பதிவு செய்துள்ளார்கள்."

"ஆச்சு முடிச்சாச்சு."

ஜனார்தனுக்கு நாக்கு உலர்ந்து போயிருந்தது. "பணம் வந்து மேலே ஏதாவது" என்றார். "போதும்" என்று ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு சந்திரன் புறப்பட்டான். அவன் உதட்டோரத்தில் லேசாக ஒரு புன்னகை இருந்தாற்போலத் தோன்றியது. ஜனார்தனுக்கு பயமாக இருந்தது. கதவை மூடு முன் "அவளுக்கு இன்னும் விஷயம் தெரியாது. நான் சொல்லவா, நீங்க சொல்றீங்களா?"

"நானே சொல்றேன், அவளை அனுப்பு"

"இன்னிக்கு ஆபிசுக்கு வரல்லே. நீங்க நேராப்போய் வீட்டிலே சொல்லிடறது நல்லதுன்னு நினைக்கிறேன்." அவன் போனதும் சற்று நேரம் அந்த செய்தியையே நோக்கிக் கொண்டிருந்தார். பணம் என்னும் மாயப் பிசாசின் சக்தி இங்கிருந்து ஒரு இம்மி நகராமல் மேற்கே ஆயிரம் மைல் தள்ளி ஒரு விபத்தை அமைத்துக்காட்ட முடிகிறது. விபரீதத்தை மடி நிறையக் கட்டிக் கொண்டு என்ன செய்யப் போகிறேன்.

சந்திரன்! பயமாயிருக்கிறதே!

என்ன பயம்? லட்சியத்தை, நீ நினைத்ததை அடைய எத்தனை தடைகளை சமாளித்திருக்கிறாய், எத்தனை பேர் உயிருடன் கொல்லப்

படுகிறார்கள். எத்தனை துரோகங்கள்.. அவன் சாலையில் தன்னை எது அடித்தது என்று உணர்வதற்கு முன் இறந்து போயிருப்பான். பிறந்தவர்கள் அத்தனை பேரும் இறக்க வேண்டியதுதானே! எதற்கு வேதாந்தம்! இப்போது சாயாவைப் பார்த்துச் சமாதானம் சொல்ல வேண்டிய கடமை.

ஆள்வார்பேட்டையில்போஸ்ட் ஆபிசைத் தாண்டி ஸி.பி. ராமசாமி அய்யர் ரோடை அடுத்து நடனப்பள்ளியை கடந்து அந்த எட்டு ஃப்ளாட்டுகளில் பின் பக்கமாக இருந்தது. வாசலிலேயே இறங்கிக் கொண்டு — இனி என்ன ரகசியம்-மெல்ல அதை நாடி மணிப் பொத்தானை அழுத்தினார். மறுபடி அழுத்தினதில் உள்ளே மின்சாரம் இல்லாததால் கேட்கவில்லை என்பது உறுதியாயிற்று. பைக்குள் இருந்த சாவியை எடுத்துக் கதவைத் திறந்தார். சாயா என்று கூப்பிடத்தான் நினைத்தார். அந்த அறையிலிருந்து சிரிப்பொலி எழ புரியாத பாஷையில் குரல்கள் கேட்டன. சாயாவின் குரல், உடன் ஆண் குரல். அறைவாசலில் பூட்ஸும் அவசரமாக கழற்றி எறியப்பட்ட ஸாக்ஸும் இருக்க அறைக் கதவு லேசாக திறந்திருக்க சாயா.

கதவை முழுவதும் திறந்தார். அந்த இளைஞன் உடல் பூராவும் வியர்வையாக அவள் மேல் படர்ந்து பல விதங்களில் அவள் முகத்தில் தன் முகத்தை அழுத்திக் கொண்டிருக்க...

ஐனார்தன் பேச்சற்று சற்று நேரம் அந்த இளம் உடல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். பல்லிகளும், பாம்புகளும் நினைவுக்கு வர "சாயா" என்றார் சற்றுத் தெளிவாகவே.

"ஓ காட் வாட்ஸ் திஸ்!" அவன் சட்டென்று எழுந்து படுக்கையில் போர்வையை இடுப்பில் சுற்றிக் கொள்ள சாயா சட்டென்று எழுந்து பிறந்த மேனியாக மேசை நாற்காலியில் விரிந்திருக்கும் ஸாரியை நாடியது அந்த கணத்தில் கூட வேடிக்கையாக இருந்தது.

"என்ன ஸார் இது! அறிவித்து விட்டு வர வேண்டாமா?"

"மணியடித்தேன். பவர் வீட்டிலே இல்லை. என் வீட்டில் என் சாவியைக் கொண்டு நுழைந்தேன். சாயா, நீ இதை எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறாயோ, தெரியாது. உன் கணவனைப் பற்றிய ஒரு மோசமான செய்தியைச் சொல்லத்தான் வந்தேன். அது உனக்கு இப்போது தேவைப்பட்ட அதிர்ச்சியைத் தராது என்று தோன்றுகிறது. நீ இப்படி நடந்து கொள்வாய் என்று கனவிலும் நினைக்கவில்லை..."

"வெயிட்! வாட்ஸ் ஆல்திஸ் சாயா! உன் கணவனா? யார் அவன்?"

"வினய் பவ்டேகர். அவனைப் பற்றிய செய்தி சொல்லத்தான் வந்தேன்."

"வினய் பவ்டேகர். யாரு நம்ம கோக்கியா?" அவன் கைதட்டிச் சிரித்தான். "சாயா எப்

## அடுத்த வாரம்




## மருத்துவ யோசனைகள்

COMICS PDF TIMES

தங்களுடைய படங்களில் கதாநாயகியை மற்ற கதாபாத்திரங்களைவிடப் புத்திசாலியாக உருவாக்குகிறீர்களே? இதற்குத் தனிப்பட்ட காரணம் ஏதேனும் உண்டா?



பதிலளிக்கிறார்

**கே.பாலசந்தர்**

**இன்றிரவு ஏப்ரல் 11 ல 9.30 க்கு**
**விவிதபாரதி சென்னை, திருச்சி வானொலி**

**கல்கி** வழங்கும்

**நேரம் நல்ல நேரம்**



**தயாரிப்பு: எஸ்.வி. ரமணன்**

**புகைப்படம்: யோகா.**

COMICS PDF TIMES

---

போது நீ பக்கத்து வீட்டு மாமாவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டாய்?''

சாயா சிரித்து ''வினோத்! இது நான் சொன்னேன் இல்லையா, மிஸ்டர் ஜனார்தன்..''

''ஓல்டி ஓல்ட் மேன் இன் லவ்! தர்மாத்மா''

''ஸார் இது வினய் தோட்போளே. என் ஃபியான்ஸி..''

''என்ன சொல்கிறாய்? சாயா உன் கணவன் பூனாவில்...''

''மன்னித்துக் கொள்ளுங்கள். அது என் கணவனில்லை. அன்றைக்கு பூனாவில் உங்களை ஏர்போர்ட்டில் சந்தித்து அழைத்துச் சென்ற போது ஓட்டல் அறையில் நீங்கள் அத்துமீறி பழக ஆரம்பித்தீர்கள். அந்த சங்கடத்தை சமாளிக்கவே என்னை இரவு வீட்டுக்கு அழைத்துச் செல்ல வந்திருந்த பக்கத்து வீட்டுக்கார பவ்டேகரை கொஞ்ச நேரத்துக்கு என் கணவனாக சொல்லிக் கொள்ள வேண்டியிருந்தது. அவரும் ஒத்துழைத்தார். தொடர்ந்து என்னைக் கல்யாணமானவள் என்று சொல்லிக் கொள்வதில் சில சௌகரியங்கள் இருந்தன. ஒரு எல்லைக்குமேல் உங்களால் அருகில் வரமுடியவில்லை... எனக்கு இனிமேல்தான் கல்யாணம் ஆகப் போகிறது. வினோத் எம்.பி. ஏ. முடித்ததும் ஸ்டேட்ஸ் போகப் போகிறான். நானும் போக உத்தேசம். விடுமுறைக்குச் சென்னைக்கு வரவழைத்தேன்...''

''சாயா உங்களைப் பற்றி எல்லாக் கடிதத்திலும் எழுதிவிட்டாள். உங்கள் ஃப்ளாட் ரொம்ப ரொம்ப வசதி, என்ன சாயா?'' என்று அவளைப் பார்த்துக் கண்ணடித்தான்.

ஜனார்த்தன் இடைவிடாத உபயோகத்தால் களைத்திருந்த படுக்கையைப் பார்த்தார். பவ்டேகர் பற்றி ஏதோ செய்தி சொல்ல வேண்டும் என்று ஜனார்த்தன் சிரித்துக் கொண்டே ''பவ்டேகர் ஒரு சாலை விபத்தில் இறந்துவிட்டார்'' என்றார். ஜனார்த்தன் வெளியே வரும்போது கூடச் சிரித்துக் கொண்டுதான் வந்தார். காரில் சிரித்தார். ஆபீஸில் சிரித்தார். சந்திரனைப் பார்த்துச் சிரித்தார். நர்ஸிங் ஹோமில் அட்மிட் ஆகி மயக்க மருந்து கொடுக்கிற வரைக்கும் சிரித்தார்.

(முற்றும்)